(2) சராசரி முறை : $\sigma = \sqrt{\frac{\sum d^2}{n}}$ , $d = x - \bar{x}$

(3) ஊகச்சராசரி முறை : $\sigma = \sqrt{\frac{\sum d^2}{n} - \left(\frac{\sum d}{n}\right)^2}$ , $d = x - A$ , $A =$ ஊகச்சராசரி

(v) **தொகுக்கப்பட்ட விவரங்களின் திட்டவிலக்கம் ($\sigma$).**

$\sigma = \sqrt{\frac{\sum fd^2}{\sum f} - \left(\frac{\sum fd}{\sum f}\right)^2}$ , $d = x - A$ , $A =$ ஊகச்சராசரி

(vi) முதல் $n$ இயல் எண்களின் திட்டவிலக்கம், $\sigma = \sqrt{\frac{n^2 - 1}{12}}$.

(vii) மாறுபாட்டுக்கெழு, $C.V = \frac{\sigma}{\bar{x}} \times 100\%$.

- **நிகழ்தகவு :.**

(i) $A$ என்ற நிகழ்ச்சியின் நிகழ்தகவு, $P(A) = \frac{n(A)}{n(S)}$

(ii) உறுதியாகக் கிடைக்கப்பெறும் நிகழ்ச்சியின் நிகழ்தகவு 1 ஆகும். அதாவது $P(S) = 1$.

(iii) இயலா நிகழ்ச்சியின் நிகழ்தகவு 0 ஆகும். அதாவது, $P(\emptyset) = 0$.

(iv) நிகழ்தகவின் மதிப்பானது எப்பொழுதும் 0 முதல் 1 வரை மட்டுமே இருக்கும். அதாவது, $0 \le P(A) \le 1$.

(v) ஒரு நிகழ்ச்சி நடக்காமல் இருப்பதற்கான நிகழ்தகவு, $P(\bar{A}) = 1 - P(A)$ ஆகும்.

- **நிகழ்தகவின் கூட்டல் தேற்றம் :.**

(i) $A$ மற்றும் $B$ என்பன ஏதேனும் இரு நிகழ்ச்சிகள் எனில்,
$$P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B)$$

(ii) $A$ –யும் $B$ –யும் ஒன்றையொன்று விலக்கும் நிகழ்ச்சிகள் எனில்,
$$P(A \cup B) = P(A) + P(B)$$

(iii) $A$ , $B$ மற்றும் $C$ என்பன ஏதேனும் மூன்று நிகழ்ச்சிகள் எனில்,
$$P(A \cup B \cup C) = P(A) + P(B) + P(C) - P(A \cap B) - P(B \cap C) - P(A \cap C) + P(A \cap B \cap C)$$

(iv) $A$, $B$ மற்றும் $C$ என்பன ஒன்றையொன்று விலக்கும் நிகழ்ச்சிகள் எனில்,,
$$P(A \cup B \cup C) = P(A) + P(B) + P(C)$$

(v) $P(A$ மட்டும்$) = P(A \cap \bar{B}) = P(A) - P(A \cap B)$ மற்றும்
$P(B$ மட்டும்$) = P(\bar{A} \cap B) = P(B) - P(A \cap B)$



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## சிறு தேர்வு - 1

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) $A = \{a, b, p\}, B = \{2, 3\}, C = \{p, q, r, s\}$ எனில், $n[(A \cup C) X B]$ ஆனது
(அ) 8 (ஆ) 20 (இ) 12 (ஈ) 16

2) $A = \{1, 2, 3, 4, 5\}$ – லிருந்து, B என்ற கணத்திற்கு 1024 உறவுகள் உள்ளது எனில் B – ல் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை
(அ) 3 (ஆ) 2 (இ) 4 (ஈ) 8

3) $n(AXB) = 6$ மற்றும் $A = \{1, 3\}$ எனில், $n(B)$ ஆனது
(அ) 1 (ஆ) 2 (இ) 3 (ஈ) 6

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) $A = \{1, 2, 3\}$ மற்றும் $B = \{x \,/\, x$ என்பஉஊ 10 – ஐ விடச் சிறிய பகா எண்$\}$ எனில், $A \text{ X } B$ மற்றும் $B \text{ X } A$ ஆகியவற்றைக் காண்க.

5) $A = \{m, n\}$ மற்றும் $B = \emptyset$ எனில் (i)A X B மற்றும் (ii) A X A. (iii) B X A காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) $A = \{x \in \mathbb{W} / \, x < 2\}$ , $B = \{x \in \mathbb{N} / \, 1 < x \le 4\}$ மற்றும் $C = \{3, 5\}$எனில்,$A \text{ X } (B \cup C) = (A \text{ X } B) \cup (A \text{ X } C)$ என்பது உண்மையா என சோதிக்கவும்.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) கொடுக்கப்பட்ட முக்கோணம் $PQR$ – க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{3}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{3}{5} < 1$)

## சிறு தேர்வு - 2

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) $f(x) = 2x^2$ மற்றும் $g(x) = \frac{1}{3x}$ எனில் $fog$ ஆனது
(அ) $\frac{3}{2x^2}$ (ஆ) $\frac{2}{3x^2}$ (இ) $\frac{2}{9x^2}$ (ஈ) $\frac{1}{6x^2}$

2) $n(A) = m$ மற்றும் $n(B) = n$ என்க. A – லிருந்து B –க்கு வரையறுக்கப்பட்ட வெற்று கணமில்லாத உறவுகளின் மொத்த எண்ணிக்கை
(அ) $m^n$ (ஆ) $n^m$ (இ) $2^{mn} - 1$ (ஈ) $2^{mn}$

3) $\{(a, 8), (6, b)\}$ ஆனது ஒரு சமனிச்சார்பு எனில், $a$ மற்றும் $b$ மதிப்புகளாவன முறையே (அ) (8, 6) (ஆ) (8, 8) (இ) (6, 8) (ஈ) (6, 6)

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) $A = \{1, 2, 3, 4, \dots, 45\}$ மற்றும் $R$ என்ற உறவு "$A$ – யின் மீது, ஓர் எண்ணின் வர்க்கம்" என வரையறுக்கப்பட்டால், $R$ -ஐ $A \text{ X } A$ -யின் உட்கணமாக எழுதுக. மேலும் $R$ – க்கான மதிப்பகத்தையும், வீச்சகத்தையும் காண்க.

5) $A \text{ X } B = \{(3, 2), (3, 4), (5, 2), (5, 4)\}$ எனில் $A$ மற்றும் $B$ – ஐக் காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) $A$ என்பது 8–ஐ விடக் குறைவான இயல் எண்களின் கணம், $B$ என்பது 8–ஐ விடக் குறைவான பகா எண்களின் கணம் மற்றும் $C$ என்பது இரட்டைப்படை பகா எண்களின் கணம் எனில் $A \text{ X } (B - C) = (A \text{ X } B) - (A \text{ X } C)$ என்பதைச் சரிபார்க்கவும்.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) $y = \frac{1}{2}x$ என்ற நேரிய சமன்பாட்டின் / சார்பின் வரைபடம் வரைக. விகிதசம மாறிலியை அடையாளம் கண்டு, அதனை வரைபடத்துடன் சரிபார்க்க. மேலும், (i) $x = 9$ எனில் $y$ – ஐக் காண்க. (ii) $y = 7.5$ எனில் $x$ – ஐக் காண்க.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## சிறு தேர்வு - 3

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக** **(3 x 1 = 3)**

1) $f$ மற்றும் $g$ என்ற இரண்டு சார்புகளும் $f = \{(0,1),(2,0),(3,-4),(4,2),(5,7)\}$, $g = \{(0,2),(1,0),(2,4),(-4,2),(7,0)\}$ எனக் கொடுக்கப்பட்டால் $fog$ – ன் வீச்சகமானது
அ) $\{0,2,3,4,5\}$ (ஆ) $\{-4,1,0,2,7\}$ (இ) $\{1,2,3,4,5\}$ (ஈ) $\{0,1,2\}$

2) $g = \{(1,1),(2,3),(3,5),(4,7)\}$என்ற சார்பானது$g = (x) = \alpha x + \beta$ எனக் கொடுக்கப்பட்டால் $\alpha$ மற்றும் $\beta$ – வின் மதிப்பானது
(அ) $(-1,2)$ (ஆ) $(2,-1)$ (இ) $(-1,-2)$ (D) $(1,2)$

3) $f(x) = \sqrt{1+x^2}$ எனில் (அ) $f(xy) = f(x).f(y)$ (ஆ) $f(xy) \geq f(x).f(y)$
(இ) $f(xy) \leq f(x).f(y)$ (ஈ) இவற்றில் ஒன்றுமில்லை

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) $\{(x,y)/\ y = x+3,\ x,\ y$ ஆகியவை இயல் எண்கள் $< 10\}$ என்ற உறவை (i) அம்புக்குறிப்படம் (ii) வரைபடம் (iii) பட்டியல் முறையில் குறிக்க.

5) $R$ என்ற உறவு $\{(x,y)/\ y = x+3, x \in \{0,1,2,3,4,5\}\}$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வுறவின் மதிப்பகம் மற்றும் வீச்சகம் காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) $A = \{2,4,6,10,12\}$ மற்றும் $B = \{0,1,2,4,5,9\}$ என்பன இரு கணங்கள் என்க. $f : A \longrightarrow B$ எனும் சார்பு $f(x) = \frac{x}{2} - 1$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இச்சார்பினை (1) வரிசை சோடிகளின் கணம் (2) அட்டவணை (3) அம்புக்குறிப்படம் (4) வரைபடம் ஆகியவற்றால் குறிக்க.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) கொடுக்கப்பட்ட முக்கோணம் $PQR$ – க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{2}{3}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{2}{3} < 1$)

## சிறு தேர்வு - 4

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக** **(3 x 1 = 3)**

1) 1 முதல் 10 வரையுள்ள (இரண்டு எண்களும் உட்பட) அனைத்து எண்களாலும் வகுபடும் மிகச் சிறிய எண்
(அ) 2025 (ஆ) 5220 (இ) 5025 (ஈ) 2520

2) யூக்ளிடின் வகுத்தல் துணைத்தேற்றத்தின் படி, $a$ மற்றும் $b$ என்ற மிகை முழுக்களுக்கு, தனித்த மிகை முழுக்கள் $q$ மற்றும் $r$, $a = bq + r$ என்றவாறு அமையுமானால், இங்கு $r$ ஆனது,
(அ) $1 < r < b$ (ஆ) $0 < r < b$ (இ) $0 \leq r < b$ (ஈ) $0 < r \leq b$

3) 65 மற்றும் 117 – யின் மீ.பொ.வ – வை $65m - 117$ என்ற வடிவில் எழுதும் போது, $m$ – யின் மதிப்பு
(அ) 4 (ஆ) 2 (இ) 1 (ஈ) 3

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) $X = \{1,2,3,4\}$, $Y = \{2,4,6,8,10\}$ மற்றும் $R = \{(1,2),(2,4),(3,6),(4,8)\}$ எனில், $R$ ஆனது ஒரு சார்பு எனக் காட்டுக. மேலும் அதன் மதிப்பகம், துணை மதிப்பகம் மற்றும் வீச்சகத்தைக் காண்க.

5) $A = \{1,2,3,4\}$ மற்றும் $B = \mathbb{N}$ என்க. மேலும் $f : A \longrightarrow B$ ஆனது, $f(x) = x^3$ என வரையறுக்கப்படுகிறது எனில், (i) $f$ – யின் வீச்சகத்தைக் காண்க. (ii) $f$ எவ்வகைச் சார்பு எனக் காட்டுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) சார்பு $f:\mathbb{R}\rightarrow\mathbb{R}$ ஆனது $f(x)=\begin{cases}2x+7 & ; \quad x<-2\\ x^2-2 & ; \quad -2\leq x<3\\ 3x-2 & ; \quad x\geq 3\end{cases}$ என வரையறுக்கப்பட்டால்,

பின்வருவனவற்றைக் காண்க. (i) $f(4)$ (ii) $f(-2)$ (iii) $f(4)+2f(1)$ (iv) $\frac{f(1)-3f(4)}{f(-3)}$

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) வர்ஷிகா வெவ்வேறு அளவுகளில் 6 வட்டங்களை வரைந்தாள். அட்டவணையில் உள்ளவாறு, ஒவ்வொரு வட்டத்தின் விட்டத்திற்கும் சுற்றளவிற்குமான ஒரு வரைபடம் வரையவும். அதனைப் பயன்படுத்தி, விட்டமானது 6 செ.மீ ஆக இருக்கும் போது வட்டத்தின் சுற்றளவைக் காண்க.

| விட்டம் $x$ (செ.மீ) | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| சுற்றளவு $y$ (செ.மீ) | 3.1 | 6.2 | 9.3 | 12.4 | 15.5 |

## சிறு தேர்வு - 5

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) $F_1=1, F_2=3$ மற்றும் $F_n=F_{n-1}+F_{n-2}$ எனக் கொடுக்கப்படின் $F_5$ ஆனது

(அ) 3 (ஆ) 5 (இ) 8 (ஈ) 11

2) ஒரு கூட்டுத்தொடர்வரிசையில் 31 உறுப்புகள் உள்ளன. அதன் 16 – வது உறுப்பு m எனில், அந்தக் கூட்டுத்தொடர்வரிசையில் உள்ள எல்லா உறுப்புகளின் கூடுதல்

(அ) 16 m (ஆ) 62 m (இ) 31 m (ஈ) $\frac{31}{2}m$

3) $7^{4k}\equiv$ _____ (மட்டு 100)

(அ) 1 (ஆ) 2 (இ) 3 (ஈ) 4

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) $R=\{(x,-2),(-5,y)\}$ என்பது சமனிச்சார்பைக் குறிக்குமெனில், $x$ மற்றும் $y$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க

5) $f(x)=\sqrt{2x^2-5x+3}$ – ஐ இரு சார்புகளின் சேர்ப்பாகக் குறிக்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) $f(x)=x-1,\ g(x)=3x+1$ மற்றும் $h(x)=x^2$ என்ற சார்புகளுக்கு $fo(goh)=(fog)oh$ என்பதைச் சரிபார்க்கவும்.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) கொடுக்கப்பட்ட முக்கோணம் $LMN$ – க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{4}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{4}{5}<1$)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## சிறு தேர்வு - 6

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) $A = 2^{65}$ மற்றும் $B = 2^{64} + 2^{63} + 2^{62} + \dots + 2^0$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. பின்வருவனவற்றில் எது உண்மை?
(அ) B ஆனது A ஐ விட $2^{64}$ அதிகம் (ஆ) A மற்றும் B சமம்
(இ) B ஆனது A ஐ விட 1 அதிகம் (ஈ) A ஆனது B – ஐ விட 1 அதிகம்

2) $t_1, t_2, t_3, \dots$ என்பது ஒரு கூட்டுத்தொடர்வரிசை எனில், $t_6, t_{12}, t_{18}, \dots$ என்பது
(அ) ஒரு பெருக்குத்தொடர்வரிசை (ஆ) ஒரு கூட்டுத்தொடர்வரிசை
(இ) ஒரு கூட்டுத்தொடரிவரிசையுமல்ல மற்றும் பெருக்குத்தொடர்வரிசையுமல்ல
(ஈ) ஒரு மாறிலித்தொடர்வரிசை

3) $\frac{3}{16}, \frac{1}{8}, \frac{1}{12}, \frac{1}{18}, \dots$ என்ற தொடர்வரிசையின் அடுத்த உறுப்பு
(அ) $\frac{1}{24}$ (ஆ) $\frac{1}{27}$ (இ) $\frac{2}{3}$ (ஈ) $\frac{1}{81}$

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) $f(x) = \frac{x+6}{3}$ மற்றும் $g(x) = 3 - x$ எனில், $fog$ மற்றும் $gof$ – ஐக் காண்க. $fog = gof$ என்பது சரியா எனச் சோதிக்க.

5) $f(x) = 3 + x$ மற்றும் $g(x) = x - 4$ எனில் $fog = gof$ என்பது சரியா?

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) $396, 504, 636$ ஆகியவற்றின் மீ.பொ.வ காண்க.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) கொடுக்கப்பட்ட முக்கோணம் $PQR$ – க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{7}{4}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{7}{4} > 1$)

## சிறு தேர்வு - 7

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) $\frac{3y-3}{y} \div \frac{7y-7}{3y^2}$ என்பது (அ) $\frac{9y}{7}$ (ஆ) $\frac{9y^3}{(21y-21)}$ (இ) $\frac{21y^2-42y+21}{3y^3}$ (ஈ) $\frac{7(y^2-2y+1)}{y^2}$

2) கீழ்க்கண்டவற்றில் எது $y^2 + \frac{1}{y^2}$ – க்குச் சமம் இல்லை
(அ) $\frac{y^4+1}{y^2}$ (ஆ) $\left(y + \frac{1}{y}\right)^2$ (இ) $\left(y - \frac{1}{y}\right)^2 + 2$ (ஈ) $\left(y + \frac{1}{y}\right)^2 - 2$

3) $x + y - 3x = -6, -7y + 7z = 7, 3z = 9$ என்ற தொகுப்பின் தீர்வு
(அ) $x = 1, y = 2, z = 3$ (ஆ) $x = -1, y = 2, z = 3$
(இ) $x = -1, y = -2, z = 3$ (ஈ) $x = 1, y = 2, z = -3$

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) $f(x) = 2x - 1$ மற்றும் $g(x) = \frac{x+1}{2}$ எனில், $fog = gof = x$ எனக் காட்டுக.

5) $fof(k) = 5,\ f(k) = 2k - 1$ எனில், $k$ - யின் மதிப்பைக் காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) $3 + 33 + 333 + \cdots$ என்ற தொடரின் முதல் $n$ உறுப்புகளின் கூடுதல் காண்க..

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) பேருந்து நிலையம் அருகே உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் பெறப்படும் கட்டணத்தொகை பின்வருமாறு



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| நேரம் (மணியில்)$(x)$ | 4 | 8 | 12 | 24 |
|---|---|---|---|---|
| கட்டணத்தொகை (ரூ) $(y)$ | 60 | 120 | 180 | 360 |

பெறப்படும் கட்டணத்தொகையானது வாகனம் நிறுத்தப்படும் நேரத்திற்கு நேர்மாறுபாட்டில் உள்ளதா அல்லது எதிர் மாறுபாட்டில் உள்ளதா என ஆராய்க. கொடுக்கப்பட்ட தரவுகளை வரைபடத்தில் குறிக்கவும். மேலும், (i) நிறுத்தப்படும் நேரம் 6 மணி எனில், கட்டணத்தொகையக் காண்க. (ii) ரூ. 150 ஐ கட்டணத் தொகையாகச் செலுத்தி இருந்தால், நிறுத்தப்பட்ட நேரத்தின் அளவைக் காண்க.

## சிறு தேர்வு - 8

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) $(2x-1)^2 = 9$ – யின் தீர்வு

(அ) $-1$ (B) $2$ (இ) $-1, 2$ (ஈ) இதில் எதுவும் இல்லை

2) $4x^4 - 24x^3 + 76x^2 + ax + b$ ஒரு முழு வர்க்கம் எனில், $a$ மற்றும் $b$ – யின் மதிப்பு

(அ) $100, 120$ (B) $10, 12$ (இ) $-120, 100$ (ஈ) $12, 10$

3) $\frac{x}{x^2-25} - \frac{8}{x^2+6x+5}$ – யின் சுருங்கிய வடிவம்

(அ) $\frac{x^2-7x+40}{(x-5)(x+5)}$ (B) $\frac{x^2+7x+40}{(x-5)(x+5)(x+1)}$ (இ) $\frac{x^2-7x+40}{(x^2-25)(x+1)}$ (ஈ) $\frac{x^2+10}{(x^2-25)(x+1)}$

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) $13824 = 2^a \times 3^b$ எனில், $a$ மற்றும் $b$ – யின் மதிப்பைக் காண்க.

5) $p^2 \times q^1 \times r^4 \times s^3 = 3{,}15{,}000$ என்றவாறு அமையும் எனில், $p, q, r$ மற்றும் $s$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) கூடுதல் காண்க: $15^2 + 16^2 + 17^2 + \cdots + 28^2$

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) கொடுக்கப்பட்ட முக்கோணம் $ABC$ – க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{6}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{6}{5} > 1$)

## சிறு தேர்வு - 9

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) ஒரு நேரிய பல்லுறுப்புக்கோவையின் வரைபடம் ஒரு

(அ) நேர்க்கோடு (ஆ) வட்டம் (இ) பரவளையம் (ஈ) அதிபரவளையம்

2) A என்ற அணியின் வரிசை 2 x 3, B என்ற அணியின் வரிசை 3 x 4 எனில், AB என்ற அணியின் நிரல்களின் எண்ணிக்கை

(அ) 3 (ஆ) 4 (இ) 2 (ஈ) 5

3) $x^2 + 4x + 4$ என்ற இருபடி பல்லுறுப்புக்கோவை $x$ அச்சோடு வெட்டும் புள்ளிகளின் எண்ணிக்கை

(அ) 0 (ஆ) 1 (இ) 0 or1 (ஈ) 2

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) $9, 3, 1, \ldots$ என்ற பெருக்குத்தொடர்வரிசையின் 8 – வது உறுப்பைக் காண்க.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

5) $3+k, 18-k, 5k+1$ என்பவை ஒரு கூட்டுத்தொடர்வரிசையில் உள்ளன எனில் $k$ – ன் மதிப்பு காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) $4x^4-28x^3+37x^2+42x+9$ என்பதின் வர்க்கமூலம் காண்க.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) ஒரு பேருந்து மணிக்கு 50 கி.மீ/மணி என்ற சீரான வேகத்தில் பயணிக்கிறது. இத்தொடர்புக்கான தூரம் – நேரம் வரைபடம் வரைந்து, பின்வருவனவற்றைக் காண்க. (i) விகிதசம மாறிலியைக் காண்க. (ii) 90 நிமிடங்களில் பயணிக்கும்தூரம் எவ்வளவு? (iii) 300 கி.மீ தூரத்தை பயணிக்க எவ்வளவு நேரம் ஆகும்?

## சிறு தேர்வு - 10

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) $A=\begin{pmatrix}1 & 2\\ 3 & 4\\ 5 & 6\end{pmatrix}, B=\begin{pmatrix}1 & 2 & 3\\ 4 & 5 & 6\\ 7 & 8 & 9\end{pmatrix}$ ஆகிய அணிகளைக் கொண்டு எவ்வகை அணிகளைக் கணக்கிட முடியும்? (i) $A^2$ (ii) $B^2$ (iii) $AB$ (iv) $BA$

(அ) (i), (ii) only (ஆ) (ii), (iii) only (இ) (ii), (iv) only (ஈ) அனைத்தும்

2) ஒரு நிரல் அணியின், நிரை நிரல் மாற்று அணி

(அ) அலகு அணி (ஆ) மூலைவிட்ட அணி (இ) நிரல் அணி (ஈ) நிரை அணி

3) நிரல்கள் மற்றும் நிரைகள் சம எண்ணிக்கையில்லாத அணி

(அ) மூலைவிட்ட அணி (ஆ) செவ்வக அணி

(இ) சதுர அணி (ஈ) அலகு அணி

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) $21+14+\frac{28}{3}+\cdots\infty$ என்ற தொடரின் கூடுதல் காண்க

5) $9+3+1+\cdots\infty$ என்ற தொடரின் கூடுதல் காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) $289x^4-612x^3+970x^2-684x+361$ - என்பதின் வர்க்கமூலம் காண்க.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) கொடுக்கப்பட்ட முக்கோணம் $ABC$ – க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{7}{3}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{7}{3}>1$)

## சிறு தேர்வு - 11

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) $\frac{AB}{DB}=\frac{BC}{FD}$ எனில், ABC மற்றும் EDF எப்பொழுது வடிவொத்தவையாக அமையும்?

(அ) $\angle B=\angle E$ (ஆ) $\angle A=\angle D$ (இ) $\angle B=\angle D$ (ஈ) $\angle A=\angle F$

2) இரு வடிவொத்த முக்கோணங்கள் $\Delta ABC$ மற்றும் $\Delta PQR$ – யின் சுற்றளவுகள் முறையே 36 செ.மீ மற்றும் 24 செ.மீ ஆகும். PQ =10 செ.மீ எனில், AB – யின் நீளம்

(அ) $6\frac{2}{3}$cm (ஆ) $\frac{10\sqrt{6}}{3}$cm (இ) $66\frac{2}{3}$cm (ஈ) 15 cm



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3) $\Delta LMN$ – யில் $\angle L = 60^o$, $\angle M = 50^o$ மேலும், $\Delta LMN \sim \Delta PQR$ எனில், $\angle R$ – யின் மதிப்பு (அ) $40^o$ (ஆ) $70^o$ (இ) $30^o$ (ஈ) $110^o$

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) 18 உறுப்புகளைக் கொண்ட ஒரு அணிக்கு எவ்வகை வரிசைகள் இருக்க இயலும்? ஓர் அணியின் உறுப்புகளின் எண்ணிக்கை 6 எனில் எவ்வகை வரிசைகள் இருக்க இயலும்?

5) 3 x 3 வரிசையைக் கொண்ட $A = a_{ij} = |i - 2j|$ என்ற அணியினைக் காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) $36x^4 - 60x^3 + 61x^2 - mx + n$ என்பது ஒரு முழு வர்க்கம் எனில் $m,\ n$ – ன் மதிப்புகளைக் காண்க.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) 6 செ.மீ விட்டமுள்ள வட்டம் வரைந்து வட்டத்தின் மையத்திலிருந்து 8 செ.மீ தொலைவில் $P$ என்ற புள்ளியைக் குறிக்கவும். அப்புள்ளியிலிருந்து $PA$ மற்றும் $PB$ என்ற இரு தொடுகோடுகள் வரைந்து அதன் நீளங்களை அளவிடுக.

## சிறு தேர்வு - 12

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) $\Delta ABC$ – யில் DE ∥ BC. AB = 3.6 செ.மீ, AC = 2.4 செ.மீ மற்றும் AD = 2.1 செ.மீ எனில், AE – யின் நீளம் (அ) 1.4 செ.மீ (ஆ) 1.8 செ.மீ (இ) 1.2 செ.மீ (ஈ) 1.05 செ.மீ

2) கொடுக்கப்பட்ட படத்தில் $\angle BAC = 90^o$ மற்றும் $AD \perp BC$ எனில்,

(அ) $BD\,.CD = BC^2$ (ஆ) $AB\,.AC = BC^2$

(இ $BD\,.CD = AD^2$ (ஈ) $AB\,.AC = AC^2$




3) 6 மீ மற்றும் 11 மீ உயரமுள்ள இரு கம்பங்கள் சமதளத்தரையில் செங்குத்தாக உள்ளன. அவற்றின் அடிகளுக்கு இடையேயுள்ள தொலைவு 12 மீ எனில் அவற்றின் உச்சிகளுக்கு இடையே உள்ள தொலைவு என்ன?
(அ) 13 மீ (ஆ) 14 மீ (இ) 15 மீ (ஈ) 12.8 மீ

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) $A = \begin{pmatrix} 0 & 4 & 9 \\ 8 & 3 & 7 \end{pmatrix}, B = \begin{pmatrix} 7 & 3 & 8 \\ 1 & 4 & 9 \end{pmatrix}$ எனில், $3A - 9B$ யின் மதிப்பு காண்க

5) $A = \begin{pmatrix} \sqrt{7} & -3 \\ -\sqrt{5} & 2 \\ \sqrt{3} & -5 \end{pmatrix}$ எனில், $(-A)$ - ன் நிரை நிரல் மாற்று அணி யைக் காண்க

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) $A = \begin{pmatrix} 3 & 1 \\ -1 & 2 \end{pmatrix}$ எனில் $A^2 - 5A + 7I_2 = 0$ என நிறுவுக.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) ஒரு துணிக்கடையானது தனது வாடிக்கையாளர்களுக்கு வாங்கும் ஒவ்வொரு பொருளின் மீதும் 50% தள்ளுபடியை அறிவிக்கிறது. குறித்த விலைக்கும் தள்ளுபடிக்குமான வரைபடம் வரைக. மேலும், (i) வரைபடத்திலிருந்து ஒரு வாடிக்கையாளர் ரூ.3250 ஐ தள்ளுபடியாகப் பெற்றால், குறித்த விலையைக் காண்க. (ii) குறித்த விலையானது ரூ..2500 எனில் , தள்ளுபடியைக் காண்க.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## சிறு தேர்வு - 13

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. (3 x 1 = 3)**

1) வட்டத்தின் வெளிப்புறப் புள்ளியிலிருந்து வட்டத்திற்கு எத்தனை தொடுகோடுகள் வரையலாம்?

(அ) ஒன்று (ஆ) இரண்டு (இ) முடிவற்ற எண்ணிக்கை (ஈ) பூஜ்ஜியம்

2) O –வை மையமாக உடைய வட்டத்திற்கு, வெளியேயுள்ள புள்ளி P– யிலிருந்து வரையப்பட்ட தொடுகோடுகள் PA மற்றும் PB ஆகும். $\angle APB = 70^o$ எனில் $\angle AOB$–யின் மதிப்பு (அ) $100^o$ (ஆ) $110^o$ (இ) $120^o$ (ஈ) $130^o$

3) படத்தில் O – வை மையமாக உடைய வட்டத்தின் தொடுகோடுகள் CP மற்றும் CQ ஆகும். ARB ஆனது வட்டத்தின் மீதுள்ள புள்ளி R வழியாகச் செல்லும் மற்றொரு தொடுகோடு ஆகும். CP = 11 செ.மீ மற்றும் BC = 7 செ.மீ எனில், BR– ன் நீளம்

(அ) 6 செ.மீ (ஆ) 5 செ.மீ

(இ) 8 செ.மீ (ஈ) 4 செ.மீ




**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:- (2 x 2 = 4)**

4) $A = \begin{pmatrix} 5 & -4 \\ 6 & -5 \end{pmatrix}$ எனில் $A^2 = I$ என்பதைச் சரிபார்க்க.

5) $A = \begin{pmatrix} 1 & 9 \\ 3 & 4 \\ 8 & -3 \end{pmatrix}$, $B = \begin{pmatrix} 5 & 7 \\ 3 & 3 \\ 1 & 0 \end{pmatrix}$ எனில் $A + (-A) = (-A) + A = 0$ என்பதைச் சரிபார்க்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:- (1 x 5 = 5)**

6) $A = \begin{pmatrix} 1 & 1 \\ -1 & 3 \end{pmatrix}, B = \begin{pmatrix} 1 & 2 \\ -4 & 2 \end{pmatrix}$ மற்றும் $C = \begin{pmatrix} -7 & 6 \\ 3 & 2 \end{pmatrix}$ எனில் $A(B + C) = AB + AC$ என்பதை நிரூபிக்கவும்.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:- (1 x 8 = 8)**

7) 5 செ.மீ ஆரமுள்ள வட்டத்தின் மையத்திலிருந்து 10 செ.மீ தொலைவிலுள்ள புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரையவும். மேலும் தொடுகோட்டின் நீளங்களைக் கணக்கிடுக.

## சிறு தேர்வு - 14

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. (3 x 1 = 3)**

1) $(-5, 0)$, $(0, -5)$ மற்றும் $(5, 0)$ ஆகிய புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு

(அ) 0 ச.அலகுகள் (ஆ) ச.அலகுகள் (இ) 5 ச.அலகுகள் (ஈ) எதுவுமில்லை

2) $(5, 7), (3, p)$ மற்றும் $(6, 6)$ என்பன ஒரு கோட்டமைந்தவை எனில், $p$ –யின் மதிப்பு

(அ) 3 (ஆ) 6 (இ) 9 (ஈ) 12

3) $3x - y = 4$ மற்றும் $x + y = 8$ ஆகிய நேர்கோடுகள் சந்திக்கும் புள்ளி

(அ) $(5, 3)$ (ஆ) $(2, 4)$ (இ) $(3, 5)$ (ஈ) $(4, 4)$

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:- (2 x 2 = 4)**

4) $A(-1, 2), B(k, -2)$ மற்றும் $C(7, 4)$ ஆகியவற்றை வரிசையான முனைப்புள்ளிகளாகக் கொண்ட முக்கோணத்தின் பரப்பு 22 சதுர அலகுகள் எனில், $k$-யின் மதிப்பைக் காண்க.

5) $P(-1.5, 3), Q(6, -2), R(-3, 4)$ ஆகிய புள்ளிகள் ஒரே கோடமைவன எனக் காட்டுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) $A = \begin{pmatrix} 1 & 2 \\ 1 & 3 \end{pmatrix}$ மற்றும் $B = \begin{pmatrix} 4 & 0 \\ 1 & 5 \end{pmatrix}$ எனில் $(A - B)^T = B^T - A^T$ என்பதைச் சரிபார்க்க.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) $xy = 24,\ x, y > 0,$ என்ற வடைபடத்தை வரைக. வரைபடத்தைப் பயன்படுத்தி,
(i) $x = 3$ எஎனில் $y$ – ஐக் காண்க மற்றும் (ii) $y = 6$ எனில் $x$ – ஐக் காண்க.

## சிறு தேர்வு - 15

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) $7x - 3y + 4 = 0$என்ற நேர்க்கோட்டிற்குச் செங்குத்தாகவும், ஆதிப்புள்ளி வழிச் செல்லும் நேர்க்கோட்டின் சமன்பாடு
(அ) $7x - 3y + 4 = 0$ (ஆ) $3x - 7y + 4 = 0$
(இ) $3x + 7y = 0$ (ஈ) $7x - 3y = 0$

2) $(0,\ 0)$ மற்றும் $(-8, 8)$ என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டிற்குச் செங்குத்தான கோட்டின் சாய்வு
(அ) $-1$ (ஆ) $1$ (இ) $\frac{1}{3}$ (ஈ) $-8$

3) Y அச்சில் அமையும் புள்ளி A – யின் செங்குத்துத் தொலைவு 8 மற்றும் X அச்சில் அமையும் புள்ளி B – யின் கிடைமட்டத்தொலைவு 5 எனில், AB என்ற நேர்கோட்டின் சமன்பாடு
(அ) $8x + 5y = 40$ (ஆ) $8x - 5y = 40$ (இ) $x = 8$ (ஈ) $y = 5$

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) $(3, -2), (12, 4)$ என்ற புள்ளிகள் வழிச் செல்லும் நேர்க்கோடு $p$ மற்றும் $(6, -2),\ (12, 2)$ ஆகிய புள்ளிகள் வழிச் செல்லும் நேர்க்கோடு $q$ ஆகும் எனில், நேர்க்கோடு $p$ - ஆனது நேர்க்கோடு $q$ – க்கு இணையாகுமா?

5) $(5,\ \sqrt{5})$ மற்றும் ஆதிப்புள்ளி ஆகிய புள்ளிகளை இணைக்கும் நேர்க்கோட்டின் சாய்வைக் காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) பிதாகரஸ் தேற்றத்தை எழுதி நிறுவுக.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) 4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைந்து அதன் மையத்திலுருந்து 11 செ.மீ தொலைவிலுள்ள ஒரு புள்ளியைக் குறித்து, அப்புள்ளியிலிருந்து வட்டத்தி'ற்கு இரண்டு தொடுகோடுகள் வரைக

## சிறு தேர்வு - 16

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) ஒரு நாற்கரமானது ஒரு சரிவகமாக அமையத் தேவையான நிபந்தனை
(அ) இரு பக்கங்கள் இணை
(ஆ) இரு பக்கங்கள் இணை மற்றும் இரு பக்கங்கள் இணையற்றவை
(இ) எதிரெதிர்ப் பக்கங்கள் இணை (ஈ) அனைத்துப் பக்கங்களும் சமம்.

2) சாய்வைப் பயன்படுத்தி நாற்கரமானது ஓர் இணைகரமாக உள்ளது எனக்கூற நாம் காண வேண்டியவை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(அ) இரு பக்கங்களின் சாய்வுகள்
(ஆ) இரு சோடி எதிர்ப்பக்கங்களின் சாய்வுகள்
(இ) அனைத்துப் பக்கங்களின் நீளங்கள்
(ஈ) இரு பக்கங்களின் சாய்வுகள் மற்றும் நீளங்கள்

3) (2, 1) ஐ வெட்டுப் புள்ளியாகக் கொண்ட இரு நேர்கோடுகள்
(அ) $x - y - e = 0 ; 3x - y - 7 = 0$ (ஆ) $x + y = 3 ; 3x + y = 7$
(இ) $3x + y = 3 ; x + y = 7$ (ஈ) $x + 3y - 3 = 0 ; x - y - 7 = 0$

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) $3x - 2y - 6 = 0$ என்ற நேர்க்கோடு ஆய அச்சுகளில் ஏற்படுத்தும் வெட்டுத்துண்டுகளைக் காண்க.

5) $x - 2y + 3 = 0,\ 6x + 3y + 8 = 0$ ஆகிய நேர்கோடுகள் ஒன்றுக்கொன்று செங்குத்தானவை எனக் காட்டுக..

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) $(-5,7),\ B(-4,k),\ C(-1,-6)$ மற்றும் $D(4,5)$ ஆகிய புள்ளிகளை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பு 72 ச.அலகுகள் எனில் $k$ –யின் மதிப்பு காண்க.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) 6 செ.மீ விட்டமுள்ள வட்டம் வரைந்து அதன் மையத்திலிருந்து 5 செ.மீ தொலைவிலுள்ள ஒரு புள்ளியைக் குறிக்கவும். அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரைந்து தொடுகோடுகள் வரைந்து தொடுகோட்டின் நீளங்களைக் கணக்கிடுக.

## சிறு தேர்வு - 17

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) $tan\theta\ cosec^2\theta - tan\theta$ – ன் மதிப்பு
(அ) $sec\theta$ (ஆ) $cot^2\theta$ (இ) $sin\theta$ (ஈ) $cot\theta$

2) $5x = sec\theta$ மற்றும் $\frac{5}{x} = tan\theta$ எனில் $x^2 - \frac{1}{x^2}$ – ன் மதிப்பு
(அ) 25 (ஆ) $\frac{1}{25}$ (இ) 5 (ஈ) 1

3) $sin^2\theta + \frac{1}{1+tan^2\theta}$ – ன் மதிப்பு
(அ) $tan^2\theta$ (ஆ) 1 (இ) $cot^2\theta$ (ஈ) 0

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) $10\sqrt{3}$ மீ உயரமுள்ள கோபுரத்தின் அடியிலிருந்து 30 மீ தொலைவில் தரையில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து கோபுரத்தின் உச்சியின் ஏற்றக்கோணத்தைக் காண்க.

5) $50\sqrt{3}$ மீ உயரமுள்ள ஒரு பாறையின் உச்சியிலிருந்து $30^o$ இறக்கக்கோணத்தில் தரையிலுள்ள மகிழுந்து ஒன்று பார்க்கப்படுகிறது எனில், மகிழுந்திற்கும் பாறைக்கும் இடையேயுள்ள தொலைவைக் காண்க.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) நாற்கர வடிவ நீச்சல் குளத்தின் கான்கிரீட் உள்முற்றமானது படத்தில் காட்டியுள்ளபடி அமைக்கப்பட்டுள்ளது எனில், உள்முற்றத்தின் பரப்பு காண்க.




**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:- (1 x 8 = 8)**

7) ஒரு நிறுவனமானது தொடக்கத்தில் 40 வேலையாள்களுடன் 150 நாள்களில் ஒரு வேலையை முடிக்கத் தொடங்கியது. பிறகு, வேலையை விரைவாக முடித்திட பின்வருமாறு வேலையாள்களை அதிகரித்தது.

| **வேலையாள்களின் எண்ணிக்கை** $(x)$ | 40 | 50 | 60 | 75 |
|---|---|---|---|---|
| **நாட்களின் எண்ணிக்கை** $(y)$ | 150 | 120 | 100 | 80 |

(i) மேலே கொடுக்கப்பட்டுள்ள தரவுகளுக்கு வரைபடம் வரைந்து, மாறுபாட்டின் வகையை அடையாளம் காண்க.

(ii) வரைபடத்திலிருந்து, நிறுவனமானது 120 வேலையாள்களை வேலைக்கு அமர்த்த விரும்பினால், வேலை முடிய எத்தனை நாள்கள் ஆகும் எனக் காண்க.

(iii) வேலையானது 30 நாள்களில் முடிய வேண்டும் எனில், எத்தனை வேலையாள்கள் தேவை?

## சிறு தேர்வு - 18

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) $x = a\tan\theta$ மற்றும் $y = b\sec\theta$ எனில்

(அ) $\frac{y^2}{b^2} - \frac{x^2}{a^2} = 1$ (ஆ) $\frac{x^2}{a^2} - \frac{y^2}{b^2} = 1$ (இ) $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ (ஈ) $\frac{x^2}{a^2} - \frac{y^2}{b^2} = 1$

2) $a\cot\theta + b\operatorname{cosec}\theta = p$ மற்றும் $b\cot\theta + a\operatorname{cosec}\theta = q$ எனில் $p^2 - q^2$ – ன் மதிப்பு

(அ) $a^2 - b^2$ (ஆ) $b^2 - a^2$ (இ) $a^2 + b^2$ (ஈ) $b - a$

3) ஒரு கோபுரத்தின் உயரத்திற்கும் அதன் நிழலின் நீளத்திற்கும் உள்ள விகிதம் $\sqrt{3}:1$ எனில், சூரியனைக் காணும் ஏற்றக்கோண அளவானது

(அ) $45^o$ (ஆ) $30^o$ (இ) $90^o$ (ஈ) $60^o$

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) ஒரு உருளையின் ஆரம் மற்றும் உயரங்களின் விகிதம் 5 : 7 ஆகும். அதன் வளைபரப்பு 5500 ச.செ.மீ எனில், உருளையின் ஆரம் மற்றும் உயரம் காண்க

5) ஒரு திண்ம அரைக்கோளத்தின் அடிப்பரப்பு 1386 ச.மீ எனில், அதன் மொத்தப்புறப்பரப்பைக் காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) இரு கப்பல்கள் கலங்கரை விளக்கத்தில் இரு பக்கங்களிலும் கடலில் பயணம் செய்கின்றன. இரு கப்பல்களிலுருந்து கலங்கரை விளக்கத்தின் உச்சியின் ஏற்றக் கோணங்கள் முறையே $30^o$ மற்றும் $45^o$ ஆகும். கலங்கரை விளக்கத்தின் உயரம் 200 மீ எனில், இரு கப்பல்களுக்கு இடையே உள்ள தொலைவைக் காண்க. $(\sqrt{3} = 1.732)$

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) $O$ – வை மையமாக்க் கொண்ட 3.6 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக. வட்டத்தின் மையத்திலிருந்து 7.2 செ.மீ தொலைவிலுள்ள $P$ என்ற புள்ளியைக் குறித்து அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரைக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## சிறு தேர்வு - 19

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. (3 x 1 = 3)**

1) ஒரு கோபுரத்தின் உயரம் 60 மீ ஆகும். சூரியனைக் காணும் ஏற்றக்கோணம் $30^o$ –லிருந்து $45^o$ ஆக உயரும் போது கோபுரத்தின் நிழலானது $x$ மீ குறைகிறது எனில் $x$– ன் மதிப்பு
(அ) 41.92 மீ (ஆ) 43.92 மீ (இ) 43 மீ (ஈ) 45.6 மீ

2) பல அடுக்குக்கட்டடத்தின் உச்சியிலிருந்து 20 மீ உயரமுள்ள கட்டடத்தின் உச்சி, அடி ஆகியவற்றின் இறக்கக்கோணங்கள் முறையே $30^o$ மற்றும் $60^o$ எனில் பல அடுக்குக்கட்டடத்தின் உயரம் மற்றும் இரு கட்டடங்களுக்கு இடையேயுள்ள தொலைவானது (மீட்டரில்)
(அ) $20, 10\sqrt{3}$ (ஆ) $30, 5\sqrt{3}$ (இ) $20, 10$ (ஈ) $30, 10\sqrt{3}$

3) ஓர் ஏரியின் மேலே h மீ உயரத்தில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து மேகத்திற்கு உள்ள ஏற்றக்கோணம் $\beta$. மேக பிம்பத்தின் இறக்கக்கோணம் $45^o$ எனில், ஏரியில் இருந்து மேகத்திற்கு உள்ள உயரமானது (மீட்டரில்)
(அ) $\frac{h(1+tan\beta)}{1-tan\beta}$ (ஆ) $\frac{h(1-tan\beta)}{1+tan\beta}$ (இ) $h\tan(45^o-\beta)$ (ஈ) None of these

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:- (2 x 2 = 4)**

4) ஒரு நேர்வட்டக்கூம்பின் கன அளவு 11088 க.செ.மீ ஆகும். கூம்பின் உயரம் 24 செ.மீ எனில், அதன் ஆரம் காண்க.

5) சம ஆரங்கள் கொண்ட இரு கூம்புகளின் கன அளவுகள் 3600 க.செ.மீ மற்றும் 5040 க.செ.மீ எனில், உயரங்களின் விகிதம் காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:- (1 x 5 = 5)**

6) தரையின் மீது ஒரு புள்ளியிலிருந்து 30 மீ உயரமுள்ள கட்டடத்தின் மேலுள்ள ஒரு கோபுரத்தின் அடி மற்றும் உச்சியின் ஏற்றக்கோணங்கள் முறையே $45^o$ மற்றும் $60^o$ எனில், கோபுரத்தின் உயரத்தைக் காண்க.($\sqrt{3}=1.732$).

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:- (1 x 8 = 8)**

7) ஒரு தொட்டியை நிரப்பத் தேவையான குழாய்களின் எண்ணிக்கையும் அவை எடுத்துக்கொள்ளும் நேரமும் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| குழாய்களின் எண்ணிக்கை ($x$) | 2 | 3 | 6 | 9 |
|---|---|---|---|---|
| எடுத்துக் கொள்ளும் நேரம் ($y$) (நிமிடங்களில்) | 45 | 30 | 15 | 10 |

மேற்காணும் தரவுகளுக்கு வரைபடம் வரைந்து,
(i) 5 குழாய்களை பயன்படுத்தினால், தொட்டி நிரம்ப எடுத்துக்கொள்ளப்பட்ட நேரத்தைக் காண்க.
(ii) 9 நிமிடங்களில் தொட்டி நிரம்பினால், பயன்படுட்தப்பட்ட குழாய்களின் எண்ணிக்கையைக் காண்க.

## சிறு தேர்வு - 20

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. (3 x 1 = 3)**

1) 15 செ.மீ உயரமும் 16 செ.மீ விட்டமும் கொண்ட ஒரு நேர்வட்டக்கூம்பின் வளைபரப்பு
(அ) $60\pi$ செ.மீ$^2$ (ஆ) $68\pi$ செ.மீ$^2$ (இ) $120\pi$ செ.மீ$^2$ (ஈ) $136\pi$ செ.மீ$^2$

2) ஆரம் 5 செ.மீ மற்றும் சாயுயரம் 13 செ.மீ உடைய நேர்வட்டக்கூம்பின் உயரம்
(அ) 12 செ.மீ (ஆ) 10 செ.மீ (இ) 13 செ.மீ (ஈ) 5 செ.மீ



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3) ஓர் உருளையின் ஆரம் அதன் உயரத்தில் மூன்றில் ஒரு பங்கு எனில், அதன் மொத்தப்புறப்பரப்பு

(அ) $\frac{9\pi h^2}{8}$ ச.அலகுகள் (ஆ) $24\pi h^2$ ச.அலகுகள்

(இ) $\frac{8\pi h^2}{9}$ ச.அலகுகள் (ஈ) $\frac{56\pi h^2}{9}$ ச.அலகுகள்

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) ஒரு கோள வடிவ வளிக்கூண்டினுள் (balloon) காற்று உந்தப்படும் போது அதன் ஆரம் 12 செ.மீ – லிருந்து 16 செ.மீ ஆக உயருகிறது. இரு புறப்பரப்புகளின் விகிதம் காண்க

5) இரு கோளங்களின் ஆரங்களின் விகிதம் 4 : 7 எனில் அவற்றின் கன அளவுகளின் விகிதம் காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) 45 செ.மீ உயரமுள்ள ஓர் இடைக்கண்டத்தின் இருபுற ஆரங்கள் முறையே 28 செ.மீ மற்றும் 7 செ.மீ எனில், இடைக்கண்டத்தின் கன அளவைக் காண்க.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) 4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக. வட்டத்தின் மீதுள்ள $L$ என்ற ஒரு புள்ளி வழியாக மாற்று வட்டத்துண்டு தேற்றத்தைப் பயன்படுத்தி வட்டத்திற்குத் தொடுகோடு வரைக.

## சிறு தேர்வு - 21

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) ஓர் அரைக்கோளத்தின் மொத்தப்பரப்பு அதன் ஆரத்தினுடைய வர்க்கத்தின் _______ மடங்காகும்?

(அ) $\pi$ (ஆ) $4\pi$ (இ) $3\pi$ (ஈ) $2\pi$

2) $x$ செ.மீ ஆரமுள்ள ஒரு திண்மக்கோளம் அதே ஆரமுள்ள ஒரு கூம்பாக மாற்றப்படுகிறது எனில், கூம்பின் உயரம்

(அ) $3x$ செ.மீ (ஆ) $x$ செ.மீ (இ) $4x$ செ.மீ (ஈ) $2x$ செ.மீ

3) ஒரு கூம்பின் அடிப்புற ஆரம்மும் மடங்காவும் உயரம் இரு மடங்காகவும் மாறினால் கனஅளவு எத்தனை மடங்காக மாறும்?

(அ) 6 மடங்கு (ஆ) 18 மடங்கு (இ) 12 மடங்கு (ஈ) மாற்றமில்லை

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) 43.5, 13.6, 18.9, 38.4, 61.4, 29.8 ஆகிய தரவுகளுக்கு வீச்சு மற்றும் வீச்சுக்கெழு ஆகியவற்றைக் காண்க.

5) ஒரு தரவின் வீச்சு 13.67 மற்றும் மிகப்பெரிய மதிப்பு 70.08 எனில், மிகச்சிறிய மதிப்பைக் காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) 16 செ.மீ ஆரமுள்ள ஓர் உலோகப்பந்து, உருக்கப்பட்டு 2 செ.மீ ஆரமுள்ள சிறு பந்துகளாக்கப்பட்டால், எத்தனை பந்துகள் கிடைக்கும்?

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) 4.5 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக. வட்டத்தின் மீதுள்ள $L$ என்ற ஒரு புள்ளி வழியாக மாற்று வட்டத்துண்டு தேற்றத்தைப் பயன்படுத்தி வட்டத்திற்குத் தொடுகோடு வரைக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## சிறு தேர்வு - 22

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. (3 x 1 = 3)**

1) $r_1$ அலகுகள் ஆரமுள்ள ஒரு கோளப்பந்து உருக்கப்பட்டு $r_2$ அலகுகள் ஆரமுடைய 8 சம கோளப்பந்துகளாக ஆக்கப்படுகிறது எனில் $r_1 : r_2$
(அ) 2 : 1 (ஆ) 1 : 2 (இ) 4 : 1 (ஈ) 1 : 4
2) கீழ்க்காணும் எந்த இரு உருவங்களை இணைத்தால் ஓர் இறகுபந்தின் வடிவம் கிடைக்கும்?
(அ) உருளை மற்றும் கோளம் (ஆ) அரைக்கோளம் மற்றும் கூம்பு
(இ) கோளம் மற்றும் கூம்பு (ஈ) கூம்பின் இடைக்கண்டம் மற்றும் அரைக்கோளம்
3) சமமான விட்டம் மற்றும் உயரம் உடைய ஓர் உருளை, ஒரு கூம்பு மற்றும் ஒரு கோளத்தின் கன அளவுகளின் விகிதம்
(அ) 1 : 2 : 3 (ஆ) 2 : 1 : 3 (இ) 1 : 3 : 2 (ஈ) 3 : 1 : 2

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:- (2 x 2 = 4)**

4) கொடுக்கப்பட்ட பரவலின் வீச்சு காண்க.

| வயது (வருடங்களில்) | 16– 18 | 18–20 | 20– 22 | 22– 24 | 24–26 | 26–28 |
|---|---|---|---|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 0 | 4 | 6 | 8 | 2 | 2 |

5) 20 தரவுப்புள்ளிகள் கொடுக்கப்பட்ட விவரத்தின் திட்டவிலக்கம் $\sqrt{6}$ ஆகும். ஒவ்வொரு தரவுப்புள்ளியும் 3 ஆல் பெருக்கப்பட்டால் கிடைக்கும் தரவுப்புள்ளிகளின் திட்டவிலக்கம் மற்றும் விலக்கவர்க்கசராசரி காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:- (1 x 5 = 5)**

6) $24, 26, 33, 37, 29, 31$ ஆகியவற்றின் மாறுபாட்டுக் கெழுவைக் காண்க.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:- (1 x 8 = 8)**

7) ஒரு பள்ளியானது, குறிப்பிட்ட சில போட்டிகளுக்கு, பரிசுத்தொகையினை எல்லா பங்கேற்பாளர்களுக்கும் பின்வருமாறு சம்மாக பிரித்து வழங்குவதாக அறிவிக்கிறது.

| போட்டியாளர்களின் எண்ணிக்கை $(x)$ | 2 | 4 | 6 | 8 | 10 |
|---|---|---|---|---|---|
| பரிசுத்தொகை (ரூபாயில்) $(y)$ | 180 | 90 | 60 | 45 | 36 |

(i) விகிதசம மாறிலியைக் காண்க.
(ii) மேற்காணும் தரவுகளுக்கு வரைபடம் வரைந்து, **12** பங்கேற்பாளர்கள் பங்கெடுத்துக் கொண்டால் ஒவ்வொரு பங்கேற்பாளரும் பெறும் பரிசுத்தொகை எவ்வளவு என்பதைக் காண்க.

## சிறு தேர்வு - 23

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. (3 x 1 = 3)**

1) கீழே கொடுக்கப்பட்டவைகளில் எது பரவல் அளவை இல்லை?
(அ) வீச்சு (ஆ) திட்டவிலக்கம் (இ) கூட்டுச்சராசரி (ஈ) விலக்கவர்க்கசராசரி
2) 8, 8, 8, 8, 8, . . . , 8 ஆகிய தரவின் வீச்சு (அ) 0 (ஆ) 1 (இ) 8 (ஈ) 3
3) 100 தரவுப்புள்ளிகளின் சராசரி 40 மற்றும் திட்டவிலக்கம் 3 எனில், தரவுப்புள்ளிகளின் வர்க்கக்கூடுதலானது
(அ) 40000 (ஆ) 160900 (இ) 160000 (ஈ) 30000



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) முதல் 21 இயல் எண்களின் திட்டவிலக்கத்தைக் காண்க.

5) ஒரு தரவின் சராசரி மற்றும் மாறுபாட்டுக்கெழு முறையே 15 மற்றும் 48 எனில், அதன் திட்டவிலக்கத்தைக் காண்க.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) இரண்டு சீரான பகடைகள் முறையே ஒரே நேரத்தில் உருட்டப்படுகின்றன.
(i) இரண்டு பகடைகளிலும் ஒரே முக மதிப்பு கிடைக்க. (ii) முக மதிப்புகளின் பெருக்கற்பலன் பகா எண்ணாகக் கிடைக்க (iii) முக மதிப்புகளின் கூடுதல் பகா எண்ணாகக் கிடைக்க (iv) முக மதிப்புகளின் கூடுதல் 1 –ஆக இருக்க ஆகிய நிகழ்ச்சிகளின் நிகழ்தகவுகளைக் காண்க.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) 3 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக. வட்டத்தின் மேல் $P$ என்ற ஒரு புள்ளியைக் குறித்து அப்புள்ளி வழியே ஒரு தொடுகோடு வரைக. (மையத்தைப் பயன்படுத்துக)

## சிறு தேர்வு - 24

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **(3 x 1 = 3)**

1) $x, y, z$ ஆகியவற்றின் திட்டவிலக்கம் $p$ – எனில், $3x+5, 3y+5, 3z+5$ ஆகியவற்றின் திட்டவிலக்கமானது

(அ) $3p+5$ (ஆ) $3p$ (இ) $p+5$ (ஈ) $9p+15$

2) ஒரு தரவின் சராசரி மற்றும் மாறுபாட்டுக்கெழு முறையே 4 மற்றும் 87.5% எனில், திட்டவிலக்கமானது

(அ) 3.5 (ஆ) 3 (இ) 4.5 (ஈ) 2.5

3) கொடுக்கப்பட்டவைகளில் எது தவறானது?

(அ) $P(A) > 1$ (ஆ) $0 \le P(A) \le 1$ (இ) $P(\varphi) = 0$ (ஈ) $P(A) + P(\bar{A}) = 1$

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:-** **(2 x 2 = 4)**

4) இரண்டு நாணயங்கள் ஒன்றாகச் சுண்டப்படுகின்றன.. இரண்டு நாணயங்களிலும் வெவ்வேறு முகங்கள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

5) ஒரு பையிலுள்ள 1 முதல் 6 வரை எண்கள் குறிக்கப்பட்ட பந்துகளிலிருந்து, இரண்டு பந்துகள் எடுப்பதற்கான கூறுவெளியை மர வரைபடம் மூலமாகக் குறிப்பிடுக.

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 5 = 5)**

6) இரு பகடைகள் ஒருமுறை உருட்டப்படுகின்றன. முக மதிப்புகளின் பெருக்கல் 6 ஆகவோ அல்லது முக மதிப்புகளின் வித்தியாசம் 5 ஆகவோ இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:-** **(1 x 8 = 8)**

7) நிஷாந்த், 12 கி.மீ தூரத்திற்கான மாரத்தான் ஓட்டத்தின் வெற்றியாளர் ஆவார். அவர் மணிக்கு 12 கி.மீ என்ற சீரான வேகத்தில் ஓடி, இலக்கினை 1 மணி நேரத்தில் அடைந்தார். அவரைத் தொடர்ந்து ஆராதனா, பொன்மொழி, ஜெயந்த், சத்யா மற்றும் சுவேதா ஆகியோர் முறையே 6 கி.மீ/மணி, 4 கி.மீ/மணி, 3 கி.மீ/மணி மற்றும் 2 கி.மீ/மணி என்ற வேகத்தில் ஓடி வந்தனர். அவர்கள் அந்த தூரத்தை முறையே 2 மணி 3 மணி, 4 மணி மற்றும் 6 மணி நேரத்தில் அடைந்தனர். வேகம் – நேரம் வரைபடம் வரைந்து அதனைப் பயன்படுத்தி, மணிக்கு 2.4 கி.மீ/மணி வேகத்தில் சென்ற கௌசிக் எடுத்துக் கொண்ட நேரத்தைக் காண்க.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## சிறு தேர்வு - 25

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. (3 x 1 = 3)**

1) ஒரு புத்தகத்திலிருந்து சமவாய்ப்பு முறையில் ஒரு பக்கம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்தப் பக்க எண்ணின் ஒன்றாம் இடமதிப்பானது **7 –ஐ** விடக் குறைவாக இருப்பதற்கான நிகழ்தகவானது

(அ) $\frac{3}{10}$ (ஆ) $\frac{7}{10}$ (இ) $\frac{3}{9}$ (ஈ) $\frac{7}{9}$

2) ஆங்கில எழுத்துக்கள் $\{a, b, c, \ldots, z\}$ – யிலிருந்து ஓர் எழுத்து சமவாய்ப்பு முறையில் தேர்வு செய்யப்படுகிறது. அந்த எழுத்து $x$ – க்கு முந்தைய எழுத்துக்களில் ஒன்றாக இருப்பதற்கான நிகழ்தகவு

(அ) $\frac{12}{13}$ (ஆ) $\frac{1}{13}$ (இ) $\frac{23}{26}$ (ஈ) $\frac{3}{26}$

3) ஒரு நபருக்கு வேலை கிடைப்பதற்கான நிகழ்தகவானது $\frac{x}{3}$. வேலை கிடைக்காமல் இருப்பதற்கான நிகழ்தகவு $\frac{2}{3}$ எனில், $x$ – யின் மதிப்பானது

(அ) 2 (ஆ) 1 (இ) 3 (ஈ) 1.5

**II. பின்வரும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.:- (2 x 2 = 4)**

4) $P(A) = \frac{2}{3}$, $P(B) = \frac{2}{5}$, $P(A \cap B) = \frac{1}{3}$ எனில், $P(A \cap B))$ ஐக் காண்க.

5) ஒரு நெட்டாண்டில் (Leap year) 53 சனிக்கிழமைகள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:- (1 x 5 = 5)**

6) சீரான மூன்று நாணயங்கள் ஒரு முறை சுண்டப்படுகின்றன. அதிகபட்சம் 2 பூக்கள் அல்லது குறைந்தபட்சம் 2 தலைகள் கிடைப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.:- (1 x 8 = 8)**

7) 3.4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக. வட்டத்தின் மேல் $P$ என்ற ஒரு புள்ளியைக் குறித்து அப்புள்ளி வழியே ஒரு தொடுகோடு வரைக. (மையத்தைப் பயன்படுத்துக)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com